**செ.வெ. எண்:169** **நாள்: 31.10.2017**

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின் அறிக்கை– 31.10.2017

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் வட்டம், ராஜாநகர், தங்கச்சிமடத்தைச் சேர்ந்த திரு. வஸ்தியம் என்பவரின் மகன் திரு. ஜெகன் என்பவர் **11.7.2017** அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், வி.சி காலனியைச் சேர்ந்த திரு பாலாஜி என்பவரின் மகன் திரு விமல்குமார் என்பவர் **21.8.2017** அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், கண்டாச்சிபுரம் வட்டம், கீழக்கொண்டூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சிவா என்பவரின் மகன் செல்வன் தனுஷ், திரு. ராஜா என்பவரின் மகன் செல்வன் ஏழுமலை மற்றும் திரு. அரிதாஸ் என்பவரின் மகன் செல்வன் மதனபாலன் ஆகியோர் **2.9.2017** அன்று ஆற்றில் குளிக்கச் சென்றபோது, மழைநீர் தேங்கிய பள்ளத்தில் தவறி விழுந்து உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், தேவபாண்டலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. குமாரசாமி என்பவரின் மகன் செல்வன் தமிழ்மணி, திரு. குமார் என்பவரின் மகன் செல்வன் அசோக் மற்றும் திரு. செல்வக்குமார் என்பவரின் மகன் செல்வன் அன்புச்செல்வன் ஆகியோர் **3.9.2017** அன்று ஏரியில் விளையாடிக்கொண்டிருந்த போது ஏரி நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்,

நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், கக்குச்சி கிராமம், பெள்ளமனடா இருஹட்டி பகுதியைச் சேர்ந்த திரு. பொன்னுசாமி என்பவரின் மகள் சிறுமி ரித்தீஷ்வரி **23.9.2017** அன்று விளையாடிக்கொண்டிருந்த போது சிமெண்ட் வளையம் தலையில் விழுந்ததில் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த ஒன்பது நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சம்பவங்களில் உயிரிழந்த ஒன்பது நபர்களின் குடும்பத்திற்கு தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**